# பாதங்கழுவுதல்

## மறுரூபமாக்கும் சத்தியங்கள்

### கட்டுரை - 3



# பாதங்கழுவுதல்

## ஒருவர் இன்னொருவருக்குப் பாதங்கழுவும் சிலாக்கியம்

**"ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்."**
**யோவான் 13:14-15**

வேதாகம காலங்களில் பாதங்களைக் கழுவும் காரியமானது அடிக்கடி அவசியமானதொன்றாகும்; ஏனெனில் இஸ்ரயேலர்கள் shoe/ஷூவிற்குப் பதிலாக, பாதரட்சைகளை அணியும் வழக்கமுடையவர்களாக இருந்தார்கள்; பெரும்பாலும் வெறுங் காலுடனே வீட்டில் காணப்பட்டனர். ஆகையால் இஸ்ரயேலர்கள் மத்தியில் விருந்தளிப்பவன், தன் விருந்தாளியினுடைய பாதங்கள் கழுவப்படத்தக்கதாகத் தண்ணீர் வழங்குவது முதலாம் கடமையாகக் காணப்பட்டது. இக்கடமையினைத் தவிர்ப்பது என்பது நட்பின்மைக்கான அடையாளமாகப் பார்க்கப்பட்டது. யூத பல்பொருள் விளக்க புஸ்தகத்தின்படி/Encyclopedia, "உணவு உட்கொள்வதற்கு முன்னதாகவும், படுக்கைக்குச் செல்வதற்கு முன்னதாகவும் பாதங்களைக் கழுவுவது வழக்கமாக இருந்தது (உன்னதப்பாட்டு 5:3-ஆம் வசனத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்)." நீண்ட நாட்கள் பாதங்களைக் கழுவாமல் இருப்பது என்பது துக்கம் அனுசரிப்பதற்கான அடையாளமாகும் (2 சாமுயேல் 19:24).

இந்த விஷயத்தில் ஆசாரியர்களுக்குச் சட்டங்களும் கொடுக்கப்பட்டிருந்தன (யாத்திராகமம் 30:18-21). பிரகாரத்தில் பரிசுத்த ஸ்தலத்திற்கும், வெண்கல தகனபலிபீடத்திற்கும் நடுவில் ஒரு வெண்கல தண்ணீர் தொட்டி வைக்கப்பட்டிருந்தது; பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்னதாக அல்லது வெண்கல

தகனபலிபீடத்தினை அணுகுவதற்கு முன்னதாக ஆசாரியர்கள் இந்தத் தண்ணீர் தொட்டியிலிருந்து தங்கள் கைகளையும், கால்களையும் கழுவிக்கொள்வார்கள்; இப்படி அவர்கள் அனைத்து விதமான ஆசாரிய அனுசரிப்புகளுக்கு, முன்னதாகச் செய்திட வேண்டும். உரிய ஆயத்தங்கள் இல்லாமல், அதாவது கைகளையும், கால்களையும் கழுவாமல் - யாரும் ஓர் இராஜாவையோ அல்லது பிரபுவையோ சந்திக்க அனுமதிக்கப்படாதது போலவே, இஸ்ரயேலர்களும், அதிலும் விசேஷமாக ஆசாரியனும் அசுத்தமான நிலைமையில் தேவனை அணுகக்கூடாது என்று சொல்லப் பட்டிருக்கின்றது; ஏனெனில் ஆசாரியன் அசுத்தமாய் வந்தால், அவன் மரணத்திற்குப் பாத்திரமாயிருப்பான்.

## *பழைய ஏற்பாட்டில் பாதங்கழுவுதல்*

விருந்தினர்கள் தங்கள் பாதங்களைக் கழுவிக் கொள்ளத்தக்கதாக அவர்களுக்குத் தண்ணீர் வழங்கப்படும் வழக்கத்தினை, நாம் ஆபிரகாமைச் சந்திக்க வந்த "மூன்று புருஷர்களின்" சம்பவத்தில் பார்க்கலாம்.

***"தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, இதோ, மூன்று புருஷர் அவனுக்கு எதிரே நின்றார்கள்; அவர்களைக் கண்டவுடனே, அவன் கூடாரவாசலிலிருந்து அவர்களுக்கு எதிர்கொண்டு ஓடித் தரை மட்டும் குனிந்து: ஆண்டவரே, உம்முடைய கண்களில் எனக்குக் கிருபை கிடைத்ததானால், நீர் உமது அடியேனைவிட்டுக் கடந்துபோக வேண்டாம். கொஞ்சம் தண்ணீர் கொண்டுவரட்டும், உங்கள் கால்களைக் கழுவி, மரத்தடியில் சாய்ந்துகொண்டிருங்கள் என்றார்." (ஆதியாகமம் 18:2-4)***

இதைப்போலவே பிற்பாடு ஆபிரகாமின் அண்ணன் மகனாகிய லோத்தும், இவர் குடும்பமும் வாழ்ந்துவந்த சோதோம் பட்டணத்தின் அக்கிரமம் கர்த்தருடைய சந்நிதியை எட்டி, அதை அழிக்கும்படிக்கு அவர் தூதர்களை அனுப்பிவைத்தபோது, அப்பட்டணத்திற்குக் கடந்து வந்த இரண்டு தேவதூதர்களுக்குப் பாதங்கழுவ, தண்ணீர் வழங்க லோத் முன்வந்தார்.

**"அந்த இரண்டு தூதரும் சாயங்காலத்திலே சோதோமுக்கு வந்தார்கள்; லோத்து சோதோமின் வாசலிலே உட்கார்ந்திருந்தான். அவர்களைக் கண்டு, லோத்து எழுந்து எதிர்கொண்டு தரைமட்டும் குனிந்து: ஆண்டவன்மார்களே, அடியேனுடைய வீட்டு முகமாய் நீங்கள் திரும்பி, உங்கள் கால்களைக் கழுவி, இராத்தங்கி, காலையில் எழுந்து பிரயாணப்பட்டுப் போகலாம் என்றான். அதற்கு அவர்கள்: அப்படியல்ல, வீதியிலே இராத்தங்குவோம் என்றார்கள். அவன் அவர்களை மிகவும் வருந்திக் கேட்டுக்கொண்டான். அப்பொழுது அவனிடத்திற்குத் திரும்பி, அவன் வீட்டிலே பிரவேசித்தார்கள். அவன் புளிப்பில்லா அப்பங்களைச் சுட்டு, அவர்களுக்கு விருந்து பண்ணினான், அவர்கள் புசித்தார்கள்." (ஆதியாகமம் 19:1-3)**

நியாயாதிபதிகள் 19:1-21-வரையிலான வசனங்களையும் பார்க்கவும்.

மேற்கூறப்பட்டுள்ள சம்பவங்களில் பாதங்கழுவும் காரியமானது, அன்பின் ஆவியினை, ஊழியத்தின் ஆவியினை மற்றும் தாழ்மையின் ஆவியினை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது; அதாவது மனுஷருடைய இருதயங்களை ஆராய்ந்து அறியும் பரம பிதாவைப் பிரியப்படுத்திடுவதற்காக விரும்பி பலி செலுத்திடும் ஆவியினை வெளிப்படுத்துகின்றதாய் இருக்கின்றது.

## *புதிய ஏற்பாட்டில் பாதங்கழுவுதல்*

## ஸ்திரீயின் கண்ணீரும், நறுமண தைலமும்

புதிய ஏற்பாட்டில் பாதங்கழுவும் சம்பவமானது லூக்கா 7:36-50-வரையிலான வசன பகுதிகளில் இடம்பெறுகின்றது. அப்போது சீமோன் எனும் பரிசேயன் இயேசுவை உணவு உண்ணும்படிக்குத் தன் இல்லத்திற்கு அழைத்திருந்தார். அவர் பந்தி அமர்ந்திருக்கையில், அப்பட்டணத்தில் பாவியாக வாழ்ந்து வந்த ஒரு ஸ்திரீ விலையேறப் பெற்ற நறுமண தைலமுள்ள பரணியுடன் ஆண்டவரிடத்திற்கு வந்தாள்.

**"அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுது கொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து,**

**தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள். அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கத்தரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். இயேசு அவனை நோக்கி: சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும் என்றார். அதற்கு அவன்: போதகரே, சொல்லும் என்றான். அப்பொழுது அவர்: ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும் மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக: எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான்; அதற்கு அவர்: சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி, ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீயைப் பார்க்கிறாயே; நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். நீ என்னை முத்தஞ் செய்யவில்லை, இவளோ, நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள். நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ, என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்பு கூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்பு கூருவான் என்று சொல்லி அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். அப்பொழுது கூடப் பந்தியிருந்தவர்கள்: பாவங்களை மன்னிக்கிற இவன் யார்? என்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள். அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்." (லூக்கா 7:38-50)**

அன்புக்குரிய நண்பர்களே, இந்த ஸ்திரீ செய்தது போன்று நம்மால் செய்ய முடியுமா?

இன்னொரு சம்பவத்தைக்குறித்த மாற்கின் சுவிசேஷ பதிவில், லாசருவின் சகோதரியாகிய மரியாளுங்கூட இயேசுவின் சிரசில் நறுமண தைலம் ஊற்றினாள் என்று பார்க்கின்றோம் (மாற்கு 14:3).

*தலையானவரால் அடையாளப்படுத்தப்படும் நம் சகோதர சகோதரிகளினுடைய மனங்களை நாம் எப்படி அபிஷேகம் பண்ணிடுவது?*

அதை நம் *சகோதர சகோதரிகள் கிறிஸ்துவுக்காக அனைத்தையும் சகித்துக்கொள்ளும்படிக்கு, அவர்கள் பெலனடைவதற்காய் நாம் ஜெபம் பண்ணிடுவதன்* மூலம் செய்திடலாம்.

இது மிகவும் முக்கியமானதாகும் . . . . . ஏனெனில் முற்றிலும் ஜெயம் கொண்டவர்களாக நாம் ஆக வேண்டும் என்ற நமது வாழ்க்கையின் ஆசையின்படி நமக்குச் சம்பவிக்க வேண்டும் என்பதற்காகவும், இன்னுமாக பிதாவுக்கு நாம் அதிகம் பிரியமாய்க் காணப்பட்டு, அவருக்குச் சந்தோஷம் கொண்டுவர வேண்டும் என்பதற்காகவும் வேண்டி - மற்றவர்கள் நமக்காய் *ஜெபம் பண்ணிட* நாம் விரும்புவோம் அல்லவா? அடியெடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியிலும் அவரது பூரண அன்பின் ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதைப்பார்க்கிலும் வேறு எது நமக்கு வேண்டும்?

*நமது சகோதர சகோதரிகளின் தலையினை அபிஷேகித்தல் என்பது* - சக அர்ப்பணிக்கப்பட்ட விசுவாசிகள் பரம காரியங்களின் மீது, எண்ணங்களில் முழுமையாய் ஆக்கிரமிக்கப்பட்டுக் காணப்படத்தக்கதாக நாம் உதவிடும்வண்ணமாக - பக்தி விருத்திக்கு ஏதுவான ஆவிக்குரிய கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளுதலையும், விசுவாசத்தைக் கட்டியெழுப்பும் கேள்விகளைக் கேட்பதையும், பாடங்களைக் குறித்துக் கலந்துரையாடுவதையும் அல்லது ஆராய்வதையும், கிறிஸ்துவுக்குள்ளான புதுச்சிருஷ்டியினைப் போஷிப்பவர்களாய் இருப்பதையும் கூடக்குறிக்கின்றதாய் இருக்கும்,

**“ஏனென்றால் மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை; அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக் கூடாமலும் இருக்கிறது. மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்க மாட்டார்கள். தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக் குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல” என்று வாசிக்கின்றோம். (ரோமர் 8:7-9)**

இயேசுவுக்கு இந்த ஸ்திரீ செய்தது போன்று, *நாம் எவ்வாறு ஒருவர் இன்னொருவரின் பாதங்களைக் கழுவுவது*?

இதைப்போல் கிறிஸ்துவுக்குள்ளான நமது சக சகோதர சகோதரிகளுக்கு *நாம் எப்படி உண்மையான விருந்தோம்பலை வெளிப்படுத்துவது*?

தேவனுடைய ஒவ்வொரு அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைக்கும், மேற்கூறிய கேள்விக்கான குறிப்பான மற்றும் துல்லியமான பதில் என்பது வேறுபட்டதாகவும், அவரவருக்கேற்றதாகவும் காணப்படும் ...அதாவது கிறிஸ்துவின் சரீரத்தில் தேவனுக்காய் ஊழியம்புரிய அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைகள் ஒவ்வொருவரும் பயன்படுத்தத் தக்கதாக வெவ்வேறு பிரத்தியேக தாலந்துகள், அவர்களுக்கு அவரால் அருளப்பட்டிருப்பது போன்றதாகும். ஆனால் தேவனுக்கு ஊழியம் புரிவதற்கென்றுள்ள நம்முடைய தாலந்துகளை நாம் எப்படிப் புதைத்துப்போடாமல் பார்த்துக்கொள்ளலாம்? *கிறிஸ்துவுக்குள் தைரியம்கொள்வதன் மூலமும், நம்முடைய ஜீவியங்களிலிருந்து மனுஷருக்கான பயத்தினை ஒழித்துக்கட்டும்படிக்குப் பரம பிதா வினிடத்தில் கேட்டுக்கொள்வதன் மூலமும்*, தேவனிடம் பயபக்தி கலந்த பயம் - அதாவது தேவனுடைய கண்களுக்கு முன்னிலையில் தவறு செய்யக்கூடாது என்ற பயம் மாத்திரம் கொண்டிருப்பதன் மூலமும், நாம் புதைத்துப்போடாமல் பார்த்துக்கொள்ளலாம்.

நம்மால் முடிந்தமட்டும் கிறிஸ்துவைப் போலாவதற்கும், மாம்சீக சௌகரிய வட்டத்திலிருந்து வெளியே வருவதன் மூலம் கிறிஸ்துவைப் போலாவதற்கும் - ஒருவேளை *மனுஷருக்கான பயம்* நம்மைத் தடைப்பண்ணுகின்றதா? . . . . . (முழுமையான வெளிச்சம் அடைவதற்கு முன்னதாக அப்போஸ்தலனாகிய பவுல் கொண்டிருந்த பயம் போன்றதொரு) கடந்த காலங்களினுடைய தவறுகளைப் பற்றின பயம் நம்மைத் தடைப்பண்ணுகின்றதா? . . . . . தவறாய்ப் புரிந்துகொள்ளப்படுவோம், புறக்கணிக்கப்படுவோம் அல்லது ஒதுக்கிவைக்கப்படுவோம் அல்லது பைத்தியம் என்றோ, தகுதி இல்லாதவன் என்றோ, தீவிரவாதி என்றோ பெயர்ச்சூட்டப் படுவோம் என்றுள்ள பயம் நம்மைத் தடைப்பண்ணுகின்றதா? இப்படியாக இருக்க வேண்டாம்!

*வலி எனும் தடைவேலியைத் தாண்டி நாம் கடந்துசெல்ல வேண்டும்!*

நீங்கள் ஏதேனும் விதத்தில் அல்லது வடிவத்தில் நீதியின் நிமித்தமாய்த் துன்பப்பட்டுக் கொண்டிருக்கவில்லை என்றால் . . . . . இது *உங்களால் முடிந்தமட்டும் நீங்கள் கிறிஸ்துவுக்குள் பிரயாசம் எடுத்துக்கொண்டிருக்கவில்லை* என்று அர்த்தமாகிவிடும்.

**"அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்." (2 தீமோத்தேயு 3:12)**

**"இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்." (1 பேதுரு 2:21)**

மரணபரியந்தம் அர்ப்பணம் பண்ணியுள்ளவர்கள் . . . வானத்தின் நட்சத்திர வகுப்பார், வாக்குத்தத்தத்தின் சுதந்தரவாளி களாகவும் (கலாத்தியர் 3:29), கிறிஸ்துவுடன் உடன் சுதந்தரர் களாகவும் (உரோமர் 8:17) காணப்படுகின்றனர். ஆனாலும் இயேசுவின் பாதங்களை மனவருத்தத்தின் கண்ணீர்களோடும்,

இயேசுவின் வஸ்திர ஓரங்களைத் தொடுவதற்குப் பாத்திரமானதினால் தனது பயபக்தியுடன்கூடிய நன்றியின் கண்ணீர்களோடும், கழுவின ஸ்திரீயில் நாம் காண்கின்ற *மன்னிப்பின், மனம்வருந்துதலின் மற்றும் தாழ்மையின் ஆவியினை* இந்த அர்ப்பணம் பண்ணியுள்ள வர்கள் *மனுஷர் மத்தியில் வெளிப்படுத்தினால் மாத்திரமே, சுதந்தர வாளிகளாகிடுவார்கள்.* இந்த ஸ்திரீ ஜனக்கூட்டத்தார் மத்தியிலிருந்து இயேசுவின் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல என்று கேள்விப் பட்டிருக்கின்றாள்; மேலும் இப்பொழுதோ அவள் அவருக்குப் *பணிவிடைப்புரிய* வாய்ப்புப் பெற்றவளானாள்; மேலும் அவர் மூலமாய்த் தன் பாவங்களிலிருந்து *சுத்திகரிக்கப்பட்டாள்* - காரணம் அவள் தன் பாவங்கள் மன்னிக்கப்பட வேண்டும் என்று விரும்பினதாலேயே ஆகும். ஒருவேளை, பிற்பாடு அவள் தொடர்ந்திருப்பாளானால், அவள் இந்த நிஜமான ஆட்டுக் குட்டியானவரின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருப்பாள். மேலும் அவளது *பயபக்தியுடன்கூடிய பயமானது,* தனக்கு மீட்பர் வேண்டும் என்ற தேவையினை அடையாளம் கண்டுகொண்டு, தேவன் பார்வையில் சரியானதாய்க் காணப்படுபவற்றை மாத்திரமே செய்ய விரும்பினது.

சீமோன் பரிசேயனாகக் காணப்பட்டப்படியால், இவர் தன்னையே முக்கியமானவராகக் கருதியிருக்கலாம் மற்றும் இயேசுவை விருந்துக்கு அழைப்பதன் மூலம் அவரை, தான் கனப்படுத்துவதாகக் கருதியிருக்கலாம்.

தான் இயேசுவுக்கு விருந்தோம்பல் உபச்சாரம் செய்தால், தன்னைக்குறித்து மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று சீமோன் கூச்சப்பட்டாரா அல்லது பயந்தாரா? அதுவும் பொது ஜனங்களால் இழிவானவளாகப் பார்க்கப்பட்ட ஸ்திரீ தம் அருகே வருவதற்கு அனுமதித்த இந்த இயேசுவுக்கு உபச்சாரம் செய்தால், மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று சீமோன் கூச்சப்பட்டாரா?

சீமோனுடைய மனப்பான்மையானது, *தற்பெருமை* என்று எண்ணுகின்றீர்களா? *சுயநீதி/வீராப்பு* என்று எண்ணுகின்றீர்களா?

எப்போதேனும் இம்மாதிரியான உணர்வுகளாகிய *புளிப்புகளை* உள்ளே நுழைய நாம் அனுமதித்திருக்கிறோமா?

கிறிஸ்துவுக்குள்ளான புதுச்சிருஷ்டிகளுக்கு *விஷம் போன்று காணப்படும் இவ்வுணர்வுகளை* நம் மனங்களினின்று அகற்றிட, நாம் மரணபரியந்தம் அதுவும் சிலுவையின் மரணபரியந்தம் தம்மையே தாழ்த்தினவராகிய *தேவனுடைய குமாரன் மீது நமது எண்ணங்களைக் கவனம் கொள்ளச் செய்திடுவோமாக* (பிலிப்பியர் 2:8).

## பாதங்களை அபிஷேகித்தல்

யோவான் 12:1-3-வரையிலான வசனப்பகுதியில், பஸ்காவிற்கு ஆறு நாட்களுக்கு முன்னதாக, இயேசு பெத்தானியாவிற்கு வந்தபோது, மரியாள் விலையேறப்பெற்ற *நளத தைலத்தினால்* இயேசுவின் பாதங்களை அபிஷேகித்தாள் என்று பார்க்கின்றோம். மரியாள் இயேசுவின் பாதங்களைத் துடைப்பதற்குத் தனது மயிரைப் பயன்படுத்தினதன் மூலம், ஆண்டவருக்கான தனது அன்புடன்கூடிய பக்தியை வெளிப்படுத்தினாள்.

*யூதாசினுடைய உண்மையற்ற வார்த்தைகளானது*, இந்த விலையேறப்பெற்ற தைலத்தினை (*ஒரு வருட கூலிக்கு இணையான விலையுள்ள தைலத்தினை*) மரியாள் பயன்படுத்தினதிலுள்ள அவரது அதிருப்தியினை வெளிப்படுத்தினபோதிலும், அவள் தன்னால் முடிந்ததைச் செய்தாள் என்பதினால், அவளை விட்டுவிடும்படியாக இயேசு கூறினார்.

இயேசு மரியாளுடைய செய்கையை மத்தேயு 26:11-13-வரையிலான வசனங்களில் பாராட்டியுள்ளார்: "**தரித்திரர் எப்போதும் உங்களிடத்தில் இருக்கிறார்கள் நானோ எப்போதும் உங்களிடத்தில் இரேன். இவள் இந்தத் தைலத்தை என் சரீரத்தின்மேல் ஊற்றினது என்னை அடக்கம் பண்ணுவதற்கு எத்தனமான செய்கையாயிருக்கிறது. இந்தச் சுவிசேஷம் உலகத்தில் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கங்கே இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.**"

உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பூமியில் *தங்களுக்கு மிகவும் விலையேறப்பெற்ற சொத்துக்களைப்போன்று ஜீவனோடு காணப்படும் - கிறிஸ்துவினுடைய பாத அங்கத்தினர்களை* - எப்படி நடத்த வேண்டும் என்பதை மேற்கூறிய சம்பவம் எத்துணை அருமையாய் விவரிக்கின்றது. இந்தப் பாத அங்கத்தினர்களில் நாம் கிறிஸ்துவைக் காண்கின்றோம். இவர்கள் தங்களை அர்ப்பணம் பண்ணியுள்ளதாக அறிக்கைப்பண்ணுகின்றனர்; மேலும் இவர்கள் உண்மையான அன்புடன்கூடிய இரக்கத்தின் கிரியைகள் மூலமாகவும், அக்கறையையும், கருணையையும், பொறுமையையும், உதவியினையும், அனுதாபத்தினையும் வெளிப்படுத்துவதன் மூலமாகவும் - அந்த அர்ப்பணிப்பிற்குச் சாட்சி பகர்கின்றனர். மரியாள் இயேசுவுக்குச் செய்ததுபோன்று, இவர்களும் மற்றவர்களை ஆசீர்வதிக்கும்படிக்கு நாடுகின்றனர் - கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின்மீது அடையாளமான விலையேறப்பெற்ற தைலங்களைத் தாராளமாய் ஊற்றுகின்றனர்.

ஒருவர் மற்றவருடைய பாதங்களைக் கழுவுதல் என்பது, *வசீகரமான வேலையாக இராததுபோன்று*, நம் ஒவ்வொருவரின் அபூரணங்களைக் கவனிக்கையிலும், *நமது சகோதர சகோதரிகளுக்கு ஊழியம் செய்யத் தொடர்ந்து நாடுவதற்கு*, *நமக்கு அதிகளவிலான அன்பும்*, *பீலியா அன்பும்*, *அகாப்பே அன்பும் மற்றும் தாழ்மையும் அவசியமாயிருக்கின்றது* என்பது உறுதியே.

அனைவருக்கும், அதிலும் விசேஷமாக விசுவாச வீட்டாருக்கும் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக நன்மைச் செய்ய நாடும் விஷயத்தில், நமக்குத் தடையாக இருக்கும் எந்த ஒரு விஷயத்திலுமுள்ள கருத்துவேறுபாடுகளையோ, மனஸ்தாபங்களையோ நாம் அனுமதியாமல் இருப்போமாக (கலாத்தியர் 6:10; 1 பேதுரு 3:11; சங்கீதம் 34:14; மீகா 6:8).

## சீஷர்களின் பாதங்களைக் கழுவுதல்

ஆதிசபையிலுள்ள *பரிசுத்தவாட்டிகள்* பற்றின குறிப்புகளில் ஒன்று, "**பிள்ளைகளை வளர்த்து, அந்நியரை உபசரித்து, பரிசுத்தவான்களுடைய கால்களைக் கழுவி, உபத்திரவப் படுகிறவர்களுக்கு உதவிசெய்து, சகலவித நற்கிரியைகளையும் ஜாக்கிரதையாய் நடப்பித்து, இவ்விதமாய் நற்கிரியைகளைக் குறித்து நற்சாட்சி பெற்றவளுமாயிருந்தால், அப்படிப்பட்ட விதவையையே விதவைகள் கூட்டத்தில் சேர்த்துக்கொள்ளவேண்டும்**" என்பதாகக் காணப்படுகின்றது (1 தீமோத்தேயு 5:10). அக்காலத்தில் பாதங்கழுவுதல் என்பது அவசியமானதாய்க் காணப்பட்டது, ஏனெனில் அது *பணிவிடை மற்றும் அன்புள்ள உபசரிப்பிற்கான அர்த்தமாய்க்* காணப்பட்டது. பணிவிடை மற்றும் தாழ்மைக்கான இதே கோட்பாட்டினை விவரித்திடும் விதமாக, இயேசு இதே வழக்கத்தினைக் *கடைசி இராப்போஜனத்தின் இரவில்* பயன்படுத்தினார்.

இயேசுவினுடைய ஊழியத்தின் இறுதியில், பஸ்கா பண்டிகைக்கு முன்னதாக, இரவு உணவு பரிமாறப்பட்டபோது, இயேசு தம் சீஷர்களின் பாதங்களைக் கழுவினார். மாபெரும் போதகரும், தங்கள் ஆண்டவருமானவர் இத்தகைய ஒரு காரியம் செய்வதைக் கண்டபோது, சீஷர்கள் ஆச்சரியமடைந்து, அமைதியாய் இருந்தார்கள். ஆரம்பத்தில் இயேசு தன் பாதங்களைக் கழுவ சீமோன் பேதுரு விரும்பிடவில்லை . . . . . தாம் பேதுருவின் பாதங்களைக் கழுவாவிட்டால், *பேதுருவுக்குத் தம்மோடு இராஜ்யத்தில் பங்கில்லை* என்று ஆண்டவர் சொல்வது வரையிலும் பேதுரு விரும்பவில்லை. இப்படிச் சொன்னபடியால், பேதுரு தன் முழுச்சரீரமும் கழுவப்படும்படிக்கு விரும்பினார்; எனினும் *முழுகினவன் தன் கால்களை மாத்திரம் கழுவ வேண்டியதாயிருக்கும்* என்று இயேசு சுட்டிக்காட்டினார். அவர்களில் அனைவரும் சுத்தமாய் இல்லை என்று இயேசு சுட்டிக்காட்டினார்; அவர் யூதாசைக் குறித்தே இப்படிக் கூறினார்.

இயேசு சீஷர்களை நோக்கி: "**ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்**" என்று அறிவுரை வழங்கினார் (யோவான் 13:14-15).

இயேசுவின் இச்செய்கை, தாழ்மைக்கான ஓர் உதாரண மாகவும் மற்றும் பிரதான ஸ்தானத்தை அடைவதற்கு வேண்டி, போட்டிமனப்பான்மையின் ஆவியினை இன்னமும் உடையவர்களாய்க் காணப்பட்டிருந்த அப்போஸ்தலர்களுக்கு ஒரு படிப்பினையாகவும் காணப்பட்டது. *நமது கர்த்தருடைய பின்னடியார்கள் தாங்கள் ஒருவருக்கொருவர் உதவிட அல்லது ஆறுதல் படுத்திட முடிகிறவர்களாய் இருப்பதற்கு ஏதுவான எந்த ஓர் ஊழியத்தினையும், அது எவ்வளவு கனம் குறைந்த ஊழியமாய் இருப்பினும், அதைத் தவிர்த்துக் கொள்ளக்கூடாது* என்பதே நம்முடைய புரிந்து கொள்ளுதலின்படியான படிப்பினையாகும்.

இயேசுவின் இந்தப் பாடமானது, யோவான் 13:34-35-ஆம் வசனங்களிலுள்ள அவரது வார்த்தைகளினால் விவரிக்கப்பட்டுள்ளது: "**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார்.**"

பெந்தெகொஸ்தே நாளில் கிறிஸ்துவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட பின்னரே, அவர்கள் சபையின் தூண்களாய்க் காணப்படுவதற்கு ஏதுவான அனைத்து விதங்களிலும், கிறிஸ்துவுக்கு ஊழியம் புரிவதற்குரிய தங்களது மனவுறுதியை வெளிப்படுத்த முடிந்தவர்களானார்கள் (அப்போஸ்தலர் 2:2-4, 16-18, 33, 38).

## இன்றைய காலங்களில் பாதங்கழுவுதல்

சீஷர்களுக்குத் *தாழ்மையின்* பாடத்தினையும், "*ஒருவருக்கொருவர் ஆறுதல் செய்வதற்கு ஏதுவான எந்த ஒரு பணிவிடையையும், கனம் குறைந்ததென எண்ணிவிடாதளவுக்கு ஒருவரையொருவர் அன்புகூர வேண்டும்*" எனும் பாடத்தினையும் கற்றுக்கொடுத்த ஆண்டவரினால் உதாரணமாய்ச் செய்யப்பட்ட பாதங்கழுவும் வேலையினை, நாமும் சகோதர சகோதரிகளுக்கு உதவிசெய்திடும் காரியம் வருகையில் *மகிழ்ச்சியோடு* செய்வோமாக. (சகோதரர் சார்லஸ் டி. ரசல், Biblical Expository 1).

கீழே 1932-ஆம் வருஷத்தின் வேத மாணவர்களுடைய மறு ஒன்றுசேர்தலின் மாநாட்டின் பதிவில் சகோதரர் Oscar Magnuson - அவர்களின் சில உற்சாகமளிக்கும் வார்த்தைகள் பின்வருமாறு:

"*நாம் செய்ய வேண்டும் என்று விரும்புபவைகளின் விஷயத்திற்கும், கர்த்தருக்காய்ச் செய்ய வேண்டும் என்று விரும்புபவைகளின் விஷயத்திற்கும் நாம் ஒருவேளை வரையறை வைப்போமானால், நமது கர்த்தரும் நமது உயிர்த்தெழுதலின்போது வரையறைக்குட்பட்ட திராணியுள்ள/ திறன்களுள்ள சரீரம் ஒன்றை நமக்குக்கொடுக்க வேண்டியிருக்கும். அப்படியிருக்கும் பட்சத்தில் திவ்விய சரீரமானது நமக்குப் பொருத்தமானதாய் இராது, ஏனெனில் திவ்விய சரீரத்திற்கு வரையறையற்ற திறன்கள் உண்டு.*"

நமது ஆண்டவருடைய சாந்தமுள்ள, தாழ்மையான மற்றும் அன்பின் ஆவியினை வெளிப்படுத்திடுவதற்குப் *பல்லாயிரம் வாய்ப்புகள்* காணப்படுகின்றன. தேவனுடைய உக்கிராணக்காரர்களாகவும், ஊழியக்காரர்களாகவும் காணப்படும் நாம், நமக்கே ஊழியமும், பணிவிடையும் செய்துகொண்டிருக்கக் கூடாது, நம்மையே அதிகமாய்ப் பேணிக்கொண்டிருக்கக்கூடாது; மாறாக "***மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்*" (மத்தேயு 20:28)** என்று கூறினவரின் அடிச்

சுவடுகளில், நாம் நடக்க வேண்டும் என்பதை நினைவில்கொண்டு, நாம் "***நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மை செய்வது*" (கலாத்தியர் 6:10)** நமது கடமையாகும்.

R1101-இல் சகோதரர் ரசல் அவர்கள் எழுதியுள்ளதாவது: "விசுவாச வீட்டாரிலுள்ள யாரொருவரையாவது உபசரிப்பது என்பது உண்மையில் 'ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்' என்ற நமது ஆண்டவருடைய அறிவுரையை நிறைவேற்றிடுவதாகும். ஆனாலும் இந்தப் பாக்கியமான பணிவிடையினை அளவுக்கு மீறி செய்யவோ, கூடுகைகளினுடைய ஆவிக்குரிய ஐக்கியத்தினை தவிர்த்துக்கொள்ளவோ எவருமே அனுமதிக்கப்படக்கூடாது. இதற்காக . . . அதாவது வருகைத் தந்திருப்பவர்களும், உபசரிப்பவர்களுமாகிய இருவருமே ஆவிக்குரிய உணவினை உட்கொள்ளும் பிரதானமான விருந்தில் பங்கெடுக்கத்தக்கதாக, மிகவும் எளிமையான ஏற்பாடுகளைச் செய்திட, அனைவருக்கும் வலியுறுத்தப்படுகின்றது. இத்தகைய எளிமையான ஏற்பாடுகளில் பங்கெடுப்பதற்குரிய அன்புடன்கூடிய வரவேற்பை எதிர்ப்பார்த்து வாருங்கள்."

முற்றிலும் ஜெயம்கொண்டவர்களாகும்படிக்கு மற்றவர்களுக்கு உதவிட வேண்டும் என்றுள்ள நமது அன்புள்ள வாஞ்சையில், *நாம் ஒருவர் இன்னொருவருக்குச் செய்திடும் பாதங்கழுவுதலானது பின்வருபவைகளையும் உள்ளடக்கலாம்:*

- மேல்வீட்டறையில் இயேசு தம் சீஷர்களுக்குப் பணிவிடைச் செய்தது போன்று, கிறிஸ்துவினுடைய சரீரத்தின் அங்கத்தினர்களுடன் *அன்புடன்கூடிய ஐக்கியத்தினைக் கொண்டிருப்பதற்கு வாஞ்சித்தல்* மற்றும் இவ்வைக்கியத்தினைத் *தக்கவைத்துக்கொள்ளுதல்*.

- நமது கர்த்தராம் இயேசு யோவான் 17-ஆம் அதிகாரத்தில் பதிவுச் செய்துள்ள ஜெபத்தில் கற்றுத்தந்ததுபோன்று, *ஒருவர் இன்னொருவருக்காய் ஜெபித்தல்*.

- விசுவாசத்தின் நல்லப் போராட்டத்தினைப் போராடுவதற்கும், இன்னுமாகப் பரத்திற்குரிய காரியங்கள் மீது நோக்கமாயிருப்பதன் மூலம் மனங்களைப் புதிதாக்கிக் கொள்வதன் வாயிலாய்ப் புதிய ஜீவனில் மறுரூபமடைவதற்கும் என்று *ஒருவர் இன்னொருவரை ஊக்குவித்தல்*. உதாரணத்திற்கு "***சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள்*" (எபேசியர் 5:19).**

- சபையார் மத்தியிலும், நாம் அடிக்கடி ஐக்கியம்/தொடர்பு கொண்டிருப்பவர்கள் மத்தியிலும், நாம் ஒருவேளை *ஒருவர் இன்னொருவரின் ஆவிக்குரிய வளர்ச்சியினையும், முன்னேற்றத்தினையும் ஊக்குவிப்பதில் உற்சாகமாய்ப் பங்காற்றுகிறவர்களாக* இருப்போமானால் . . . . . நமக்கு நன்மைப் பயக்கும் விதத்திலுள்ள சில தன்மைகளை, இயல்புகளை அல்லது ஆற்றல்களை நமது சகோதர சகோதரிகள் அனைவரும் பெற்றிருப்பதை நாம் அடையாளம் கண்டுகொள்ள முடிபவர்களாய் இருப்போம்; இதுபோல நாமும் அவர்களுக்கு எவ்விதத்தில் உதவியாய் இருக்க முடியும் எனும் விஷயத்தில் விழிப்புடன் காணப்பட வேண்டும்.

- சபை ஊழியங்களுக்கு *மனமுவந்து முன்வருதல்*.

- சந்திக்க நேரிடுபவர்களுக்குத் தெய்வீகத் திட்டம் பற்றின புத்தகத்தையோ அல்லது சிறுபுத்தகத்தையோ *வழங்குதல்*.

- எல்லா மனுஷர்களுடனான ஒவ்வொரு சம்பாஷணையிலும் சத்தியத்தினைக்குறித்துச் *சாட்சி பகர்தல்*.
- *போக்குவரத்து உதவிகளைச் செய்தல்*.
- E-mail/மின் அஞ்சல் வாயிலாக *ஆறுதலின் செய்திகளை எழுதி அனுப்புதல்*.
- *சத்தியத்தின் புஸ்தகங்களை அல்லது ஒலிநாடாக்களைப் பகிர்ந்துகொள்ளுதல்*.
- *தட்டச்சுச் செய்தல்*/typing மற்றும் *அச்சுப் பிழைத்திருத்தம் செய்தல்*.
- *சாட்சிகூட்டங்களில் சாட்சி பகர்தல்*.
- தொலைபேசி அல்லது கூட்டுத்தொலைபேசி உரையாடல்/ conference calls முதலியவைகள் வாயிலாகச் *சங்கீதங்களை, கீர்த்தனைகளை* மற்றும் *வேத வாக்கியங்களைப்* பகிர்ந்து கொள்ளுதல்.
- *வேதப்பாட மாத இதழ்களின் கட்டுரைகளை* அல்லது *எழுதப்பட்டுள்ள கவிதைகளைப்* பகிர்ந்துகொள்ளுதல்.
- பக்திவிருத்திக்கு ஏதுவான ஆவிக்குரிய புஸ்தகங்கள் முதலானவைகள் அடங்கிய உற்சாகமூட்டும் *சிறு பொட்டலங்களை அனுப்பி வைத்தல்*.
- *பயனுள்ள புஸ்தகம் முதலானவைகளை* உலகமெங்கும் காணப்படும் நமது சகோதர சகோதரிகளுக்கு (உதாரணத்திற்கு ஆப்பிரிக்கா, பிலிப்பைன்ஸ் . . . . . . போன்ற நாடுகளிலுள்ள சகோதர சகோதரிகளுக்கு) *அனுப்பி வைத்தல்*.

- *வியாதிப்பட்டிருப்பவர்களாகவும், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர்களாகவும்* அல்லது *தனிமையாகவும் காணப்படும் சகோதர சகோதரிகளைச் சந்திக்கச் செல்லுதல்.*

- *உங்கள் சொந்த பிள்ளைகளோடு/குடும்பத்தினரோடு காலையிலும், மாலையிலும் வேதவாக்கியங்களை வாசித்தல்.*

- ஒருவேளை உங்களுக்குத் தோட்டம் இருந்தால் . . . . . *உங்களது தோட்டத்தின் விளைச்சலிலுள்ள சிலவற்றைச்* சகோதர சகோதரிகளுக்கும், நண்பர்களுக்கும் *கொடுத்துப் பகிர்ந்து கொள்ளுதல்.*

- *தொலைபேசி/*இணையதளம் வாயிலாக மற்றவர்களுடன் *காலை மன்னா* அல்லது *இரவின் கீதங்களாகிய அநுதின தியானங்களைப் பகிர்ந்து கொள்ளுதல்.*

- ஒன்று அல்லது இரண்டு பக்கங்களை உடைய சத்திய சாட்சியின் விளம்பரங்களை/கைப்பிரதிகளைத் *தயார் செய்து*, பொது ஜனங்கள் மத்தியில் குடும்பத்தினர் சேர்ந்து விநியோகித்தல்.

- பேரங்காடிகளிலும்/பலகடை அங்காடிகளிலும் (shopping centres), சிறப்பங்காடிகளிலும் (super market) உள்ள மேஜைகளிலும், இருக்கைகளிலும் *கைப்பிரதிகளை உங்கள் பிள்ளைகள் வைக்கத்தக்கதாக உதவுதல்.*

- உலகிற்கு நம்பிக்கை அளிப்பதற்கு வருகின்ற தேவனுடைய மகிமையான இராஜ்யம் குறித்து யாராகிலும் அறிந்து கொள்ளத்தக்கதாகச் *சத்தியத்தின் சிறு புஸ்தகங்களை, நாம் ஏதேனும் இரசீதுகளை வழங்குகையில் கூடவே அனுப்பி வைத்தல்.*

- *மாநாடுகளில் சத்தியத்தின் புஸ்தகங்கள் வைக்கப்பட்டுள்ள மேஜைகளை ஒழுங்குப்படுத்திட உதவுவதற்கு முன்வருதல்.*
- *சபையாரின் பாடகர் குழுவினை ஒருங்கிணைத்தல்.*
- *வாராந்தரவேதாகம ஆராய்ச்சி வகுப்பிற்கென உங்களது இல்லங்களைத் திறந்துகொடுத்தல்.*
- மற்றவர்களுக்கு உங்கள் ஞாபகம் வருகையில், கிறிஸ்துவைப் பற்றி ஞாபகம் வரத்தக்கதாக, மின்னஞ்சல் கடிதங்களை எழுதி அனுப்பி வைக்கையில், இறுதியில் வேதவாக்கியங்களை எழுதி அனுப்புதல்.
- *வலைத்தளங்களைப்/*websites *பெற்றிருக்கும் சகோதர சகோதரிகளிடம்* . . . சத்தியத்திற்குச் சாட்சி பகரும் பிரயாசங்களில் *உங்களது திறமைகளை எவ்வாறு பயன்படுத்துவது* என்று கேட்டுக்கொள்ளுதல்.
- மூப்பர்கள் சபை கூட்டங்களை ஆயத்தம் செய்கையில், எவ்விதத்தில் அவர்களுக்கு உதவுவதன் மூலம் அவர்களது சுமையினை இலகுவாக்கிடலாம் என்று *அவர்களிடம் கேட்டுக்கொள்ளுதல்*.
- சத்தியம் சார்ந்த ஏதேனும் ஊழியங்களுக்காய்ப் பணம் சேர்க்கும் விதத்தில் விற்பதற்காகவோ அல்லது அன்பளிப்புகளாகவும், உற்சாகமூட்டும் ஆவிக்குரிய வார்த்தைகளை நினைப்பூட்டும் சீட்டுகளாகவும் கொடுப்பதற்காகவோ வேண்டி - *புஸ்தகப் பக்க அடையாளச் சீட்டுகளைத்/*bookmarks *தயார் செய்தல்*.

- *ஞாயிறு பள்ளிப் பாடங்களையும்,* *குழந்தைகளுக்கான மாநாட்டின் பாடங்களையும்* கற்றுக்கொடுப்பதற்கென உங்களது நேரங்களைச் செலவிடுதல்.

- சபையில் கூடுகைகளின் இடையே விடப்படும் இடைவேளை களில், புரிந்துகொள்வதில் சிரமப்படும் சிலர் அருகே உட்கார்ந்து, வேதவாக்கியங்களையும், வேத வாக்கிய கருத்துக்களையும் பகிர்ந்துகொள்ளுதல்.

- *ஆராய்ச்சி வகுப்புகளுக்கு ஆயத்தமாய் வருதல்.*

- அனுபவமிக்க அறிவுரையாளராக உங்களுக்குக் காணப்பட முடிகின்ற . . . . . இன்னுமாக வேத ஆராய்ச்சிகள், கேள்வி-பதில் மின்னஞ்சல் வகுப்புகள் முதலியவற்றினைச் செய்கின்ற . . . . . மூப்பரைக் கண்டுகொள்ளுதல்.

- "இரு சக்கர வண்டியில் சாட்சி பகர பிரயாணிக்கையில்," குழந்தைகளை எடுத்துச் செல்லுதல்.

நாம் ஒவ்வொருவரும் *சரீரத்தினுடைய பக்திவிருத்திக்கென்று செய்திட/கொடுத்திட ஏதோ சிலவற்றைப் பெற்றிருப்போம்* என்று உணர்ந்துகொள்ள வேண்டும். நமது சபையின் வகுப்புகளில் நமது பங்கினை ஆற்றுவதிலும், மற்றவர்களுக்காய் ஜெபிப்பதில் நமது பங்கினை ஆற்றுவதிலும், இன்னுமாக மறுரூபமடைந்து வரும் காரியத்திற்குள் கடந்துபோய்க்கொண்டிருக்கும் யாரோ ஒருவருக்கு, அதாவது விசுவாசிகளுக்கு முன்மாதிரியாக இருப்பதிலுள்ள நமது பங்கினை ஆற்றுவதிலும், நாம் உண்மையுள்ளவர்களாய்க் காணப்பட வேண்டும்.

நாம் ஒருவர் இன்னொருவரின் பாதங்களைக் கழுவுவதில் *உண்மையாய் இருப்போமாக*!

**"தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான்; என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான்." (மத்தேயு 10:39)**

ஆமென்!!

**- *BIBLE STUDENTS DAILY***
***(தமிழாக்கம்)***

நன்றி:

- சகோதரர் Homor Montague அவர்களது "பாதம் கழுவும் சிலாக்கியம்" எனும் Herald of Christ's kingdom இதழினுடைய மார்ச்/ஏப்ரல் 1998 கட்டுரைக்காய் நன்றி தெரிவிக்கின்றோம்.
- சகோதரர் சார்லஸ் டி. ரசல் அவர்களின் Biblical Expository -1- இன் பதிவுகளுக்காய் நன்றி தெரிவிக்கின்றோம்.
- சகோதரர் Oscar Magnuson அவர்களின் 1932-ஆம் வருஷத்தினுடைய Bible Students Reunion Convention Report-இல் இடம்பெறும் கட்டுரையினுடைய பதிவுகளுக்காய் நன்றி தெரிவிக்கின்றோம்.

# <u>தமிழாக்க வெளியீடுகள்:</u>

1. கிறிஸ்தவ திருமணம்

2. முறுமுறுப்பு

3. பாதங்கழுவுதல்

பிரதிகள் தேவைப்படுவோர்
தொடர்புக்கு:
8428737474; 9442221874